# அத்தி வரதர் கீர்த்திப்பா

## அத்திக்குப் பத்து - I

அத்தி வரதர் ரொம்ப சக்திவரதர்

பக்தியுட ன் துதிப்போர்க்கு முக்திதருவார்

நித்தம் ஒரு பட்டுடுத்தும் மலர் மார்பனே

தன்நிகர் இல்லாத் தனித் தேவனே

பாற்க்கடல் பரந்தாமனை ப் பார்த்ததில்லை

ஆழ்கடல் அன்னையை அறிந்ததில்லை

அனந்தசரஸ் வரதனை அனுபவித்தோம்

அடைய இனி இலக்கொன்றும் எமக்கில்லையே

தரிசனம் கண்ட மனமுருகி மெழுகாகிறதே

குளமான கண்ணில் நீர் வெளியோடுதே

உன்பாதம் சேர மனம் சிறகடிக்குதே

கள்ள உள்ளம் நிறம் மாறி வெண்பூவாகுதே!

நாற்பது ஆண்டுகள் மூச்சடக்கி கச்சி நகர் திருக்குளத்தில் துயில்கொள்ளுவாய்

அதன்பின்னர் ஒருமுறை நிலம் சேருவாய்

அடியவர் மீது அருள் மழை பொழியுவாய்!

## அத்திக்குப் பத்து -- 2

அடிக்குளத்து அழகனை தரிசிக்கவே.
பெருவெள்ளம் போல் மக்கள் பெருக்கெடுத்தார்
அடிமேல் அடிவைத்து ஊர்ந்து சென்று

அடிமுதல் முடிவரை
தரிசனப்பேறு கண்டார்
சயனித்த திருக்கோலம்
கண்டுகொண்டோம்
நின்றத்திருமேனியை நன்கு பார்த்தோம்
கரிவரதன் தரிசனம் காணப் பெற்றோம்
கலியுகக் கண்ணனின் காட்சி பெற்றோம்
நாற்பது வருடம் கடந்தபின் மூச்சுவிட
கரையேறும் நெடுமாதவா
சம்சாரக் கடலிலே அமிழ்ந்தமிழ்ந்து
உழலும் மூடர் எமை கரைசேரவழி சொல்லுவாய்.

வாய்கவ்வி குழவிகாக்கும் தாய்ப்பூனைபோல் தயைகூர்ந்து கழிவிரக்கம் கொண்டு எமை

ஆழ்கடலிலிருந்து அருளால் தூக்கிவிட்டு நற்கதி கொடுக்க உனக்கு மனமில்லையோ?

--------------

**அத்திக்குப் பத்து -- 3**

அத்திமரத்தில் உதித்தாய் அனந்தசரஸில் குளித்தாய்

கச்சியில் பள்ளி கொண்டாய்

காக்கும் தெய்வமாய் கிடந்தாய்

பேச்சற்று, மூச்சற்று; நாம்வியக்கும்

பேரழகுப் பெருமானாய் நின்றாய்

கம்சனை கொன்று காத்தாய்

கடையர் எமைக் கரையேற்றுவாய்

யானையதை வந்து காத்தாய்

முதலைக்கும் முக்தி தந்தாய்

நின்றாய், பின் பள்ளி

கொண்டாய்

நினைவெல்லாம் அள்ளிச் சென்றாய்

துதிப்பவர் துன்பம் தீர்ப்பாய்
துதியாதவர்க்கும் கருணை சேர்ப்பாய்
பாசியாய் இருந்தால் படரலாம் உன்மேல்
மீனாய் பிறந்தால் வலம் வரலாம் உன்னை
தண்ணீரானால் நன்னிராட்டலாம் உன்னை
மனிதராய் பிறந்து மடையர் ஆனோமே நாம்,
சின்ன காஞ்சியிலே நின்ற பெரிய வரதா
தேவராஜா, தேஜோமயா
தாரித்ர நாசா, தயாநிதே
துயர் துடைப்பாய், எமை கரையேற்றுவாய்

**அத்திக்குப் பத்து - 4**

குளம் அழைக்குதே, நிலம் அழுததே
குணவானே உனைப்பிரிய கண்குளமாகுதே
நாள் நெருங்குதே, உடல் நடுங்குதே
நாரணனை ப்பிரிய மனம் பதைக்குதே

பட்டாடை உடுத்திய பரந்தாமனே
பலமலர்கள் அணிந்த திருமார்பனே
நகரேஷு காஞ்சியின நவரத்தினமே.

புருஷேஷ விஷ்ணுவாய் விளங்கு புகழே.

உன் சயனம் காண விரைந்த பக்தர் எல்லாம் நடந்தார் நின்றார், பின் ஊர்ந்து சென்றார்
உன்நின்றகோலம் கண்டு உவகை கொண்டார் பின் உளம் பூரித்தார்,
வாய்குழறி நாதழுதழுத்தார் .

நாற்பத்து எட்டு நாளானபின்
விடுமுறைக்கு வந்த குலமகள்போல் அழகெலாம் ஒருசேர வந்துதித்த
திருமார்பா உன் தரிசனப் பேறுகண்டோம்

கண்டு கொண்டோம், கண்டு கொண்டோம். எனக் கொண்டாடி கூத்தாடிய ஆழ்வார்கள் போல்
நாங்களும் உரிமை பூண்டோம்

எல்லா நன்மையும் முடியும் ஓர் நாள்
எனச் சொல்லாமல் சொல்லி திரும்பும் திருவே
இது முறையோ? இது தருமம் தானோ?

**<u>அத்திக்குப்பத்து _ 5</u>**

குளம் இறங்கும் கோமானே
நிலம் விடுக்கும் திருமாலே
மனம் நிறைந்த மணிவண்ணா
உளம் புகுந்த உத்தமனே !
அத்திப்பூ பூத்தாற்போலே
ஐயெட்டு வருடம் ஓடி
நீ வந்த இந்த நன்னாள்
என் வாழ்நாளில் பொன்னாளப்பா
ஊர் திரண்டு வந்ததையா
பார் திரண்டு வந்ததையா
பரந்தாமா உனைப்பார்க்க

குழவி முதல் கிழவி வரை
குழந்தை முதல் குமரன் வரை
எல்லோரும் வந்தாரையா
எம் வரதன் என்றாரையா!
கால் கடுக்க நின்றவரும்
கண்கலங்கிப் போனவரும்
மூச்சிரைக்க வந்தவரும்
முடியாமல் விழுந்தவரும்
கண்டவுடன் களிப்புற்றார்
காதலாகிக் கசிந்தார்
பட்ட துயர் உடன் மறந்தார்
பரவசத்தில் உடல் மறந்தார்

**<u>அத்திக்குப் பத்து - 6</u>**

நீ பிரியும் நாள் நெருங்குதையா!
கனலாகுது எம் கல் நெஞ்சமையோ!

தொடரும்